## இலங்கை தேயிலைச் சபை - 2022

----------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை தேயிலைச் சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கிமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம், 1975 இன் 14 ஆம் இலக்க இலங்கை தேயிலைச் சபை அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்தும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட

தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு)**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.
- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.
- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும்.

எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இயலுமான அளவில் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,
- சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சபை இணங்கியிருந்ததா என்பதும்,
- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்
- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| **உரிய நியமங்களுடனான இணக்கமின்மைகள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| சபையினால் மீளாய்வாண்டில் இறுதியில் உள்ளபடியாக முழுமையாக பெறுமானத் தேய்விடப்பட்ட ரூபா 132,903,015 கிரயமான கணினி உபகரணங்கள் கட்புலச் சொத்துக்கள் நீர் உதிரி பாகங்கள் மற்றும் மின்சார உபகரணங்கள் வாசிகசாலை புத்தகங்கள் அலங்கார உபகரணங்கள் இரசாயன ஆய்வுகூட உபகரணங்கள் அலுவலக உபகரணங்கள் தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள் மற்றும் இயந்திரம் மற்றும் உபகரணங்கள் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டவாறு காணப்பட்ட போதிலும் இலங்கை | ஐயவினாவில் குறிப்பிடப்பட்டுள்ள கட்புலச் சொத்துக்கள் நீர் உதிரி பாகங்கள் மற்றும் மின்சார உபகரணங்கள் வாசிகசாலை புத்தகங்கள் அலங்கார உபகரணங்கள் இரசாயன ஆய்வுகூட உபகரணங்கள் அலுவலக உபகரணங்கள் தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள் மற்றும் இயந்திரம் மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றை மீள் மதிப்பீடு செய்வதற்கு அதிக கிரயம் மேற்கொள்ள நேர்கின்றமையால் அதற்குரிய அனுமதி கிடைக்கவில்லை. | முழுமையாக பெறுமானத் தேய்வு இடப்பட்ட சொத்துக்களின் வினைத்திறனான ஆயுட் காலத்தினை மீண்டும் மதிப்பீடு செய்து கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் 51 பந்திக்கமைய அந்த சொத்துக்களை பயன்படுத்தி ஆயுட்காலம் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை | | |

**1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு இலங்கை வங்கி கொள்ளுபிட்டி கிளையின் 1633709 ஆம் இலக்க கணக்கிலும், இலங்கை வங்கி பம்பலபிட்டிய கிளையின் 718391 இலக்கமுடைய வங்கிக் கணக்கின் வாடிக்கையாளர்களினால் நேரடியாக வைப்புச்செய்யப்பட்ட முறையே ரூபா 2,602,782 மற்றும் ரூபா 4,900,294 பணத்திற்கான வருமான நிதி மூலத்தினை இனங்காண்பதற்கு முடியாதிருந்ததுடன் கடந்த வருடத்தில் வருமான மூலங்களை இனங்காண முடியாதிருந்த வருமானத்தின் அளவானது ரூபா 4,326,882 ஆகும். இதற்கிணங்க மீளாய்வாண்டிற்கான வருமானம் ரூபா 11,829,958 ஆல் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | 1633709 கணக்கு இலக்கமுடைய கொள்ளுப்பிட்டிய இரண்டாவது கிளையில் வாடிக்கையாளர்களின் நேரடி வைப்புக்களின் வருமான மூலத்தினை இனங்காண முடியாதிருந்ததுடன், 2023 ஏப்ரல் மாதம் வங்கி இணக்க கூற்றினை தயாரிக்கும் போது இனம் காணக்கூடிய அனைத்து வைப்புக்களும் உரிய வருமான மூலங்களுக்கு கணக்கு வைக்கப்பட்டதுடன் இனம் காண முடியாத சில வாய்ப்புகள் ஏனைய வருமானமாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. அத்துடன் 2022 ஆம் ஆண்டுக்கு உரிய அனைத்து நேரடி வாய்ப்புகளும் சீராக்கம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | நேரடி வைப்பக்கள் சம்பந்தமாக வருமான மூலங்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 2023 பிப்ரவரி 6 முதல் 10 வரை ரஷ்யாவின் மொஸ்கோ தலைநகரில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்ட "Prodexpo 2023" கண்காட்சிக்கு விசா மற்றும் ஒழுங்கமைப்பு பணிகளுக்கு அந்நாட்டு தூதரகத்திற்கு செலுத்திய ரூபா 10,437,332 தொகையான முற்கொடுப்பளவு மீளாய்வாண்டின் செலவினம் ஒன்றாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டில் குறித்த திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | 2023 ஆம் ஆண்டின் செலவாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (இ) | "Prodexpo 2023" கண்காட்சிக்கு 2023 ஆம் ஆண்டில் பங்குபெற்றும் ஏற்றுமதியாளர்களிடம் இருந்து அறவிடப்பட்ட 50 சதவீத செலவின பங்கு ரூபா 11,771,399 முற்பணமாக கணக்கு வைப்பதற்கு பதிலாக மீளாய்வாண்டின் செலவின | 2023 ஆம் ஆண்டு உரிய திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | இந்த பணத்தை முற்பண பெறுவனவாக கணக்கு வைக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | கடந்த வருடங்களில் காணிகளின் பெறுமதியின் கீழ் மூலதனம் ஆக்கப்பட்டிருந்த ரூபா 8,500,000 பெறுமதியான கம்பளை பிரதேச அலுவலக கட்டிடம் மீளாய்வாண்டின் போது கட்டிடங்கள் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது. அத்துடன் அந்த பெறுமதி நிதிக்கூற்றுகளில் கட்டிடக் கொள்வனவாக பதிவு செய்யப்பட்டுள்ளது. | F குறிப்பில் இந்த சீராக்கம் தவறுதலாக ஆண்டிற்குரிய சேர்ப்பனவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளமை, 2023 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுகளில் திருத்துவதற்கு மற்றும் உரிய வகைப்படுத்தின்கீழ் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 2023 ஆம் ஆண்டில் கணக்கிட்டு வலுக்கள் திருத்தப்பட வேண்டும். |

### 1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| விடயம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி | தொடர்புடைய அறிக்கையின் பிரகாரம் பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | | |
| இரசாயன ஆய்வுகூட வருமானம் | 19,802,796 | 38,577,200 | 18,774,404 | இரசாயன ஆய்வுகூட வருமானத்தை உரிய முறையில் இணக்கம் செய்யும் நடைமுறை தற்போது இடம்பெற்றவாறு உள்ளதுடன் எதிர்காலத்தில் இவ்வாறான மாற்றங்களை ஏற்படாதிருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இரசாயன ஆய்வுக்கூட வருமானத்தை இணக்கம் செய்து வேறுபாட்டிற்கான காரணத்தை ஆராய்ந்து உரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய பணம்

| (அ) | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| | சிறு தேயிலை தோட்ட அபிவிருத்தி அதிகார சபையின் உத்தியோகத்தர்களை விசேட பயணங்களுக்கான செலவினங்களை மேற்கொண்ட ரூபா | சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகார சபையின் உத்தியோகத்தர்களின் வெளிநாட்டு பயண செலவினங்களுக்காக பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய ரூபா 317,252 தொகை அதன் நிதி முகாமையாளரால் 2023 ஜூன் மாதம் | வெளிவாரி தரப்பினருக்கு மேற்கொண்ட வெளிநாட்டு பயண செலவினங்கள் துரிதமாக அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 317,232 மற்றும் வ/ப களுபோவிட்டியான தேயிலை தொழிற்சாலை கம்பனியில் உத்தியோகத்தர்களின் வெளிநாட்டு பயண செலவினங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 79,200 தொகை 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக பெற வேண்டிய மீதியாக நிதிக்கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இந்த பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | அதிகார சபையின் பணிப்பாளர் சபைக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் குறித்த பணத்தை தீர்பனவு செய்வதாக தெரிவித்திருந்தார். | |
| (ஆ) | 2017 ஆம் ஆண்டின் போது உலகளாவிய தேயிலை உபசரிப்பிற்காக வெளிநாட்டு தூதுவராலயங்களுக்கு வழங்கிய ரூபா 51,604,457 பணத்தில் 15 நாடுகளின் சேமிப்பாகிய ரூபா 918,679 பணம் மற்றும் சீனா, ஐக்கிய இராஜ்யம், மற்றும் மொஸ்கோ ஆகிய நாடுகளின் தூதரகங்களில் இருந்து பெறவேண்டிய. ரூபா 868,578 தொகை உரிய தூதரக அலுவலகங்களில் இலங்கை வெளிநாட்டு அலுவலக அமைச்சுக்கு அனுப்பப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வு திகதி வரையிலும் அந்த அமைச்சிலிருந்து பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் மூலம் அனுப்பப்பட்ட 2023.01.09 திகதிய கடிதத்தின் பிரகாரம் குறித்த அனுப்பல்களை இனம் காணுவதற்கு உரிய மெய்மையாய்வு ஆவணங்கள் மற்றும் உரிய தகவல்கள் கோரப்பட்ட மாதிரி படிவத்தின் பிரகாரம் 2023.01.28 திகதி அனுப்பப்பட்டது. இது தொடர்பில் திட்டவட்டமான பதில் ஒன்று இதுவரையிலும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சிலிருந்து இலங்கை தேயிலை சபைக்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. | பெற வேண்டிய பணம் இலங்கை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சிடமிருந்து பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2019 ஆம் ஆண்டின் போது பிராந்திய பெருந்தோட்ட கம்பனிகளின் தொழிலாளர்களுக்கு தீபாவளி விழா முற்பணத்தை செலுத்துவதற்கான ரூபா 8,760,400 கடன் பணமானது எல்கடுவ பெருந்தோட்டக் | பிரதேச பெருந்தோட்ட கம்பெனிகளில் தொழிலாளர்களுக்கு தீபாவளி பண்டிகை முற்பணமாக செலுத்த வழங்கப்பட்ட ரூபாய் 8,760,400 தொகையை தீர்ப்பனவு செய்யுமாறு பெருந்தோட்ட கம்பெனிக்கு பல்வேறு சந்தர்ப்பங்களில் அறிவித்திருந்ததுடன், அதற்கு சாதகமான பதில் ஒன்று வழங்கப்பட்டுள்ளதுடன் | இந்த கடன் தொகை பெருந்தோட்ட கம்பெனியிலிருந்து அறவிடுவதற்கு துரிதமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் இதற்கு பொறுப்பு கூற வேண்டிய சபையின் தரப்பினரை |

| | | | |
|---|---|---|---|
| | கம்பனிக்கு சபையின் தேயிலை மேம்பாட்டு நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டது. இந்த முற்பணத்தை செலுத்தி 03 ஆண்டுகள் மிகைத்திருந்தும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அம்மீதியில் எப்பணத்தையும் அறவீடு செய்வதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அந்த தொகையை தீர்ப்பது செய்வதற்கு தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. | இனம் கண்டு அவர்களுக்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | தேயிலை சபையினால் நடாத்திச் செல்லப்படும் மேம்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தல் வரி நிதியத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட அனுப்பல்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டபோது நிதி அமைச்சு, இலங்கை மத்திய வங்கி மற்றும் மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபை ஆகியவற்றால் இந்த நிதியத்திற்கு வழங்கப்பட்டுள்ள ரூபா 1,055,625,000 தொகையான கடன் பணம் 2022 டிசம்பர் 31 ஆன் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றின் M பதிவின் மூலம் அறவிடப்பட வேண்டிய ரூபா 10,055,385,399 தொகையை அறவிடுவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | பெறவேண்டிய பணத்தை துரிதமாக அறவிட வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ள படியாக தேயிலை தோட்டங்களில் இருந்து தேயிலை கொழுந்துகளை விநியோகிப்பவர்களுக்கு செலுத்துவதற்கு சபையில் வைப்புச் செய்யப்பட்டுள்ள மற்றும் மீளாய்வாண்ன்டின் இறுதி வரையிலும் உரிய முறையில் தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுத்திடாத வைப்புக்களின் பெறுமதியானது ரூபா | பச்சை தேயிலை விநியோகிப்பவர்களுக்கு உரிய பணத்தை செலுத்துவதற்கு திறந்த அறிவித்தல் ஒன்று வெளியிடப்பட்டு சான்று படுத்தலுடன் தேயிலை சபைக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. உரிய சான்று படுத்தல்களை சமர்ப்பித்த தேயிலை விநியோகத்தர்களுக்கு மாத்திரம் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் உரிய முறையில் சமர்ப்பிக்காத 10 வருடங்களுக்கு மேற்பட்ட தொகையினை வருமானமாக கருதி நடவடிக்கை எடுப்பதற்கு மற்றும் வருமானமாக | செலுத்த வேண்டிய தரப்பினரை சரியாக இனம் கண்டு வைப்பு பணத்தை துரிதமாக தீர்ப்பனவு செய்ய வேண்டும். |

| | |
|---|---|
| 92,245,738 ஆக காணப்பட்டதுடன் அவற்றுள் ரூபா 6,508,027 தொகையானது 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் பழமையான வாய்ப்புகள் ஆகும். | கணக்கு வைக்கப்பட்ட வைப்புகளுக்கு நியாயமான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டால் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் செலுத்துவதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை நி.பி.396(ஈ) | காசோலைகளை வழங்கிய திகதி அதன் செல்லுபடியான காலம் ஆகிய இரண்டில் பின்னர் உள்ள திகதியிலிருந்து 06 மாதங்களுக்கு மேற்பட்ட காலமாக அதாவது 2019 ஆம் ஆண்டு முதல் கொடுப்பனவுகளுக்கு வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத கொழுப்பிட்டி இலங்கை வங்கி கிளையின் 78285018 இலக்கமுடைய நடைமுறை கணக்கில் ரூபா 1,078,533 ஆன காசோலைகள் தொடர்பில் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிவாரணங்களுக்காக வழங்கப்பட்ட இந்த காசோலைகள் நலனாளிகளுக்கு வழங்கப்பட வேண்டியவை என்பதுடன் இது தொடர்பில் நிதிப் பிரமாணம் 396 (ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | 06 மாதங்களுக்கு மேற்பட்ட கொடுப்பணவுக்கு சமர்ப்பிக்கப்படாத காசோலைகளுக்கு நிதி பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.8 வரிப்பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீனாய்வாண்டுக்காக இலங்கை தேயிலைச் சபையில் முதலீட்டு வருமானத்திற்கான வரி செலவினத்தை இனங்காணும் போது ரூபா 10,493,150 ஆன வட்டி வருமானம் வரி | ரூபா 10,493,150 தொகையான வட்டி வருமானத்திற்கு உரிய வருமான வரி தொகையான ரூபா 2,518,356 தொகையானது 2023.05.15 திகதி உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு | சரியான வரிச் செவினத்தை இனங்கண்டு கணக்கு வைக்க வேண்டும். |

| | |
|---|---|
| வருமானத்திற்கு எடுக்கப்பட்டிராமையால் வரிச் செலவினம் மற்றும் செலுத்த வேண்டிய வரிச் செலவினம் ரூபா 2,518,356 இனால் குறைத்து நிதிக்கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. | அனுப்பப்பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 210,289,737 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 8,194,034 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 202,095,703 முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. இந்த முன்னேற்றதிற்கு அபிவிருத்திச் செலவினங்கள் கடந்த வருடத்திற்கு ஒப்பாக ரூபா 32,362,518 இனால் வீழ்ச்சியடைந்தமை மற்றும் தேயிலை மேம்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தல் வரி நிதியத்தின் வட்டி வருமானத்தில் தேயிலை சபைக்கு மாற்றப்பட்ட நிதியத்தின் அளவானது ரூபா 290,228,000 அதிகரித்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

### 2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

| விடயம் | 2022<br>ரூபா | 2021<br>ரூபா | வேறுபாடு<br>ரூபா | சதவீதம |
|---|---|---|---|---|
| **வருமானம்** | | | | |
| இரசாயன ஆய்வுகூட வருமானம் | 19,802,796 | 4,993,851 | 14,808,945 | 297 |
| மேம்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தல் வரித்தொகை | 409,228,000 | 119,000,000 | 290,228,000 | 244 |
| நிலையான வைப்பு வட்டி வருமானம் | 75,129,356 | 22,808,317 | 52,321,039 | 229 |
| வணிக நடவடிக்கைகளின் மூலம் ஈட்டப்பட்ட இலாபம் | 10,200,165 | 5,015,129 | 5,185,036 | 103 |
| ஏனைய வருமானம் | 8,656,261 | 4,951,504 | 3,704,757 | 75 |
| **செலவினங்கள்** | | | | |
| அபிவிருத்தி செலவினம | 144,658,596 | 177,021,114 | 32,362,518 | 18 |
| நிர்வாக செலவினம் | 504,880,134 | 449,018,159 | 55,861,975 | 12 |

கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது இரசாயன ஆய்வு கூட வருமானம் 297 சதவீதத்தினாலும், தேயிலை மேம்படுத்தல் மற்றும் விற்பனை வரி நிதியத்தின் வட்டி வருமானத்தில் தேயிலை சபைக்கு மாற்றப்பட்ட பணத்தின் அளவானது 244 சதவீதத்தினாலும், நிலையான வைப்பு வட்டி வருமானம் ஆனது 229 சதவீதத்தினாலும், வணிக நடவடிக்கைகளின் மூலம் ஈட்டப்பட்ட இலாபம் 103 சதவீதத்தினாலும் அதிகரித்திருந்ததுடன் அபிவிருத்தி செலவினமும் 18 சதவீதத்தினால் குறைவடைந்து இருந்தது.

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

மீளாய்வாண்டின் நடைமுறை மற்றும் விரைவு சொத்துக்களின் விகிதம் 7 : 1 ஆக காணப்பட்டதுடன் கடந்த வருடத்தில் அந்த விகிதம் 14: 1 ஆக காணப்பட்டது. கடந்த வருடத்திற்கு ஒப்பாக நடைமுறை

சொத்துக்கள் 15 சதவீதத்தால் அதிகரித்திருந்த போதிலும் நடைமுறை பொறுப்புக்கள் 124 சதவீதத்தால் அதிகரித்திருந்த காரணத்தால் இந்த விகிதம் கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது 50 சதவீதத்தால் மாற்றமடைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | களுத்துறை பிரதேச அலுவலகம் நடாத்திச் செல்லப்படும் 1 ரூட் 20 பேர்ச் பரப்பளவான காணி 2014 ஆம் ஆண்டு முதல் 30 வருட காலத்திற்கு இலங்கை தேயிலைச் சபைக்கு நீண்டகால குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு காணிகள் ஆணையாளரினால் மேல் மாகாண, மாகாண காணிகள் ஆணையாளருக்கு சமர்ப்பிக்கப்பட்ட 4/10/37833 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் அமைச்சின் அங்கீகாரம் கிடைத்திருந்தமை குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் இதுவரையிலும் குத்தகை உடன்படிக்கை கைச்சாத்திரப்பட்டிருக்கவில்லை. | களுத்துறை பிரதேச அலுவலகத்தினால் இதுவரையிலும் இலங்கை தேயிலைச் சபையின் அளவீட்டு கூலியை பெற்றுக் கொண்டுள்ளாதுடன், குறித்த காணியில் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடம் இலங்கை தேயிலை சபையினால் நிர்மாணிக்கப்பட்டதாகும். அதற்கு அமைய பாலிந்தநுவர பிரதேச செயலாளரின் இணக்கப்பாட்டுடன் அரச விலை மதிப்பீட்டு திணைக்களத்தில் இருந்து அந்த கட்டிடம் 2022 ஆம் ஆண்டு மதிப்பிடப்பட்டு அதன் பெறுமதி கணக்கு வைக்கப்பட்டுள்ளது. | சட்ட ரீதியான குத்தகை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட வேண்டும். |
| (ஆ) | நுவரெலியா பிரதேச அலுவலகத்தில் நடாத்திச் செல்லப்படும் களனி வெளி தோட்ட கம்பெனியிலிருந்து நுவரெலியா பிரதேச செயலாளரினால் சுவீகரிக்கப்பட்டிருந்த காணியின் உரித்து சட்டரீதியாக சபைக்கு பெற்றுக் கொள்ளப்படாத போதிலும் ரூபா 148,013,695 கிரயமான கட்டிடம் திணைக்களத்தினால் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. | நுவரிலியா பிரதேச அலுவலகத்தில் காணியை சுவீகரிக்கும் பணிகள் பிரதேச அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்டு உரிய தகவல்கள் வழங்கப்பட வேண்டும். | காணியில் சட்டரீதியான உரித்தினை பெற்றுக்கொள்ள துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை தேயிலை சபையில் நுவரெலியா பிரதேச அலுவலகத்தின் தேயிலை விற்பனை நிலையத்தில் வியாபார பணிகள் 6 வருடங்களுக்காக ரூபா 8,162,296 ஆன குத்தகை தொகைக்கு 2019 ஆம் ஆண்டில் தனியார் தரப்பினருக்கு உடன்படிக்கையொன்று கைச்சாத்திரப்பட்டு வியாபார | குறித்த அறவீடுகளை பெற்றுக் கொள்வதற்கு வாடகையாளருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. | தாமதிக்காது குத்தகையாளரிடம் நிலுவை வாடகை அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பணிகள் நடத்திச் செல்லப்பட்ட போதிலும் குறித்த தரப்பினருடன் உடன்படிக்கை கைச்சாத்திடும் போது அந்த நிறுவனத்தின் செலுத்தக்கூடிய இயலுமை தொடர்பில் சபையினால் பரீட்சிக்கப்பட்டிராததுடன் 2019 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையிலும் நுவரெலியா தேயிலை விற்பனை நிலையத்திலிருந்து சபைக்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 986,253 தொகையான குத்தகை பணம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | 2014 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ‘‘டீ மொமன்ட்ஸ்’’ எனும் பெயருடைய கொழும்பு தேயிலை விற்பனை நிலையத்தில் சாத்தியவள கற்கை ஒன்றினை மேற்கொள்ளாது ஆரம்பித்தல் மற்றும் ஆக்கபூர்வமான விதத்தில் நடைமுறைப்படுத்தாத காரணத்தால் சபைக்கு ஏற்பட்ட ரூபா 62,603,006 ஆன நட்டத்தை பதிவழித்திருந்தது. இது தொடர்பில் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் செயலாளர் 2016 டிசம்பர் 06 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் கவனயீனமாக செயல்பட்ட உத்தியோகத்தர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுப்பதற்கு பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என தலைவருக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் பணிப்பாளர் சபையினால் ஒழுங்காற்று நடவடிக்கை எடுப்பது பொருத்தமற்றது என தீர்மானிக்கப்பட்டிருந்தமையால் நட்டத்திற்கு பொறுப்புக் கூற வேண்டிய தரப்பினர்களுக்கு எதிராக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ‘‘டீ மொமன்ட்ஸ்’’ எனும் பெயருடைய கொழும்பு தேயிலை மத்திய நிலையத்தின் உருவாக்கம் பணிப்பாளர் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் என்பதுடன் அதற்கு உத்தியோகத்தர்களின் தலையீடு இடம்பெறவில்லை. அதனால் ஏற்பட்ட நட்டம் தொடர்பில் உத்தியோகத்தர்கள் பொறுப்புக் கூறுதல் அவசியம் அற்றது என்பதால் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட கூடாது என பணிப்பாளர் சபையினால் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. | இந்த நட்டத்தை பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர் அல்லது பணிப்பாயர் சபையின் அங்கத்தவர்கள் இனங்காணப்பட்டு பணம் அஅறவிடுவதற்க விசாரணைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். |
| (உ) | 2009 ஆம் ஆண்டில் ரூபா 32,132,088 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்ட கிருமிநாசினி பகுப்பாய்வு | ஏற்றுக் கொள்கின்றோம். பனிப்பாளர் சபையினால் குற்ற பத்திரத்தில் மற்றும் நடத்தப்பட்ட முறையான ஒழுக்காற்று விசாரணையின் | உழுக்காற்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு துரிதமாக நிறைவு செய்யப்பட்டு இந்த |

| | | | |
|---|---|---|---|
| | இயந்திரம் (Liquid Chromatography Mass Spectrometer) உரிய அமைப்பு குறிப்பீடுகளுக்கு இணங்காத காரணத்தால் இதுவரையிலும் பயன்படுத்தப்பட்டிராததுடன் கொள்வனவு செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் இடம்பெற்றுள்ள முறைகேடுகள் தொடர்பில் முன்பு இரசாயன ஆய்வுக்கூடத்திற்கு இணைப்புச் செய்யப்பட்டு சேவையாற்றிய உதவி பணிப்பாளருக்கு எதிராக குற்ற பத்திரம் வெளியிடப்பட்டு முறையான ஒழுங்காற்று விசாரணை நிறைவு செய்யப்பட்டு 2022 செப்டம்பர் 22 ஆம் தேதி பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், பணிப்பாளர் சபையினால் குற்ற பத்திரத்திலும் முறையான ஒழுக்காற்று பரிசோதனை முடிவுகளினதும் நியாயம் மற்றும் பக்க சார்பற்ற தன்மை தொடர்பில் உறுதிப்படுத்துவதற்கு மீண்டும் ஒரு சுயாதீன உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டு இருந்தமையால் உரிய ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு இதுவரையிலும் முடியாது போயிருந்த போதிலும் குற்றம் சாட்டப்பட்ட உதவி பணிப்பாளர் மீளாய்வாண்டின் ஓய்வு பெற்று சென்றிருந்ததுடன், சபையினால் ரூபா 1,559,775 பணிக்கொடை உத்தியோகத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது.<br>ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கு ரூபா 205,454 சபையினால் செலவிடப்பட்டிருந்தது. | முடிவுகளின் பொழிப்புகளை மேலும் உறுதிப்படுத்துவதற்கு நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர் நோய்வாய்ப்பட்டமையால் 2023.04.27 திகதி இடம்பெற்ற பனிப்பாளர் சபை கூட்டத்தில் மற்றுமொரு உத்தியோகத்தரை நியமிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அந்த நியமனம் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் ஒரு மாதத்தினுள் அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | முறைகேடு காரணமாக சபைக்கு ஏற்பட்ட நட்டம் பொறுப்புக்கூற வேண்டியவர்களிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | சபையினால் 2023 செப்டம்பர் 19 ஆம் திகதி மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி சபைக்கு வழங்கிய ரூபா 25,000,000 கடன் தொகைக்கு மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்கு சொந்தமான ஹன்தானயில் அமைந்துள்ள "Ceylon Tea Museum"இன் உரித்து தேயிலை சபைக்கு சாட்டுவதற்கு 2012 ஜூன் | 2023.01.13 ஆந் திகதி இடம் பெற்ற மியூசியத்தின் பணிப்பாளர் சபை கூட்டத்திற்கு பங்கு பற்றிய மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையின் தலைவர் எதிர்காலத்தில் உரிய சிக்கல்களை தீர்ப்பதற்கு அவசியமான நடவடிக்கை எடுப்பதாக அறிவித்துள்ளார். அதற்கமைய மேலதிக நடவடிக்கை இடம் பெற்றவாறு உள்ளது. | சபையினால் மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி சபைக்கு வழங்கிய தொகைக்காக ஹந்தானயில் அமைந்துள்ள "Ceylon Tea Museum" இனை சுவீகரிப்பதற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

19 ஆம் திகதி இடம்பெற்ற பொது முயற்சிகள் குழுவின் கட்டளைக்கமைய தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் இதுவரையிலும் குறித்த நடைமுறை நிறைவு செய்யப்பட்டு Ceylon Tea Museum இன் உரித்து சுவீகரிக்கப்பட்டிராததுடன், கடன் பணத்தை மீள பெற்றுக் கொள்வதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2020 பெப்ரவரி 27 ஆம் திகதி மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி சபையின் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளங்களை செலுத்துவதற்காக தேயிலை சபையினால் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்கு மீண்டும் ரூபா 10,000,000 ஆன கடன் தொகை வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் அவற்றுள் ரூபா 1,000,000 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | இந்து இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (ISFTA) மற்றும் பாகிஸ்தான் - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் (PSFTA) கீழ் தேயிலைக்காக விருப்புக் கட்டண விகிதம் (Preferential Tariff Rate Quota) காணப்பட்டிருந்தும் அதில் குறிப்பிடதக்க அளவு பயன்பாட்டினை அறிக்கையிடுவதற்கு 2022 ஆம் ஆண்டின் போதும் முடியாதிருந்ததுடன், கடந்த வருடத்திற்கு ஒப்பாக இந்தியா மற்றும் பாகிஸ்தானுக்கு மேற்கொண்ட மொத்த ஏற்றுமதியின் அளவு மீளாய்வாண்டின் போது முறையே 32 சதவீதத்தினால் மற்றும் நூறு | சந்தை பிரவேசத்தினை மட்டுப்படுத்தும் சான்றுபடுத்தல் மற்றும் தேவைப்பாடுகளுக்கு இணங்குவதற்கான நீண்ட தாமதங்கள் நிலவுகின்றமை இலங்கை தேயிலையில் விலை உயர்வாக காணப்படுதல், பாகிஸ்தான் நுகர்வோர்களின் பெரும்பாலானோர் Orthodox சிலோன் தேயிலையுடன் ஒப்பிடும்போது கென்யாவின் CTC தேயிலை மீது கூடிய விரைப்பினை கொண்டுள்ளமையால் கோட்டாவில் உச்ச பயனை பெற்றுக் கொள்ளாது உள்ளத்துடன் வருடம் ஒன்றுக்கு ஒரு மில்லியன் கிலோ கிராமினை விட குறைந்த அளவு ஏற்றுமதி செய்யப்படுகிறது. | சுதந்திர வர்த்தக உடன்படிக்கையிலிருந்து உச்ச அளவு பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்வதற்கு உள்ள தடைகளை தவிர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தது. | | |
| (ஆ) | இலங்கையின் மொத்த தேயிலை உற்பத்தியும் ஏற்றுமதியும் படிப்படியாக முன்னேற்றமடையாமையால் சர்வதேச தேயிலைக் குழு செய்திக்கான பிற்சேர்க்கையின் (Supplementary to International Tea Committee News Bulletin) பிரகாரம் 2011 ஆம் ஆண்டின் போது இலங்கையின் தேயிலைக்கான உலகளாவிய தேயிலை சந்தையின் பங்கு (World Prod Share) 18 சதவீதமாக இருந்த போதிலும் மீளாய்வாண்டளவில் இலங்கையின் தேயிலைக்கான உலகளாவிய தேயிலை சந்தை பங்கு 3.88 சதவீதம் வரை வீழ்ச்சியடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. | 2021 ஆம் ஆண்டுக்கு ஒப்பாக 2022 ஆம் ஆண்டில் தேயிலை ஏற்றுமதி மற்றும் தேயிலை உற்பத்தி இயலளவு குறைவடைந்து இருந்த போதிலும் தேயிலை உற்பத்தி பெறுமதிக்கு ஒப்பாக தேயிலை ஏற்றுமதியின் முன்னேற்றத்தை காணக்கூடியததாக இருந்தது. அது 93.47% இலிருந்து 97.18% சதவீதம் வரை 3.71 % சதவீதத்தால் அதிகரித்துள்ளது. கொள்கை தீர்மானம் ஒன்றின் அடிப்படையில் உற்பத்தி வீழ்ச்சி அடைந்தமைக்கு ஒப்பாக இலங்கை தேயிலைக்கான கேள்வியை பூர்த்தி செய்வதமையில் உயர்வான விகிதம் ஒன்றினை அறிக்கையிட்டு உற்பத்திக்கு ஒப்பாக ஏற்றுமதியில் முன்னேற்றமொன்று (2022) கடந்த வருடங்களில் காணக்கூடியதாக இருந்தது. | தேயிலை உற்பத்தியையும் உலகளாவிய சந்தையில் தேயிலைக்கான பங்கினையும் அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2022 ஆம் ஆண்டின் திட்டத்தின் பிரகாரம் வெளிநாட்டு சந்தை கண்காட்சிகள் 34 இதுக்காக பங்கு பெற்ற திட்டமிடப்பட்டு ரூபா 200,000,000 வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டின் மூலம் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் ஆண்டினுள் 25 சந்தை கண்காட்சிகளுக்கு பங்குபற்றுவதற்கு ரூபா 104,201,553 செலவிடப்பட்டிருந்தது. சபையினால் தெரிவு செய்யப்பட்ட ஏற்றுமதியாளர்களுக்கு வெளிநாட்டு சந்தை ஏலங்களில் பங்கு மற்றும் சந்தர்ப்பம் மற்றும் நிவாரணங்களை வழங்கிய பின்னர் இந்த சந்தை கண்காட்சிகளில் முன்னேற்றம் தொடரில் பின்தொடர்தல் ஒன்று இடம்பெறாமல் மற்றும் வர்த்தக கண்காட்சியின் பின்னர் ஏற்றுமதியாளர்களின் செயல் முன்னேற்றத்தை மதிப்பீடு செய்வதற்கான மதிப்பீட்டு பத்திரம் (Evaluation Form) வழங்கப்பட்டு | கடந்த கொவிட் தொற்று நோய் பரவல் காலத்தில் ஏற்பட்ட சுற்றுலா தடைகள் காரணமாக 2022 ஆம் ஆண்டில் வெளிநாட்டு சந்தை கண்காட்சிகளுக்கு மீண்டும் ஏற்றுமதியாளர்களின் பங்களிப்பில் அதிகரிப்பினை காணக் கூடியதாக இருந்தது. இதன்போது குறித்த சந்தை கண்காட்சிக்கு பங்கு பற்றிய ஏற்றுமதியாளர்களின் அந்த கண்காட்சி முடிவடைந்த போது மதிப்பீட்டு பத்திரத்தின் மூலம் அப்போது பெற்றுக் கொள்ளப்பட்ட கட்டளைகளின் முன்னேற்றம் உறுதிப்படுத்தப்பட்டது. அதன் போது பெரும்பாலான கட்டளைகளில் கூறுவிலைகள் மற்றும் கட்டளையின் தன்மை தற்காலிக மட்டத்தில் காணப்பட்டமையால் குறித்த வர்த்தக கண்காட்சி நிறைவடைந்து ஒரு வருடம் கடந்துள்ள சந்தர்ப்பத்தில் உண்மையான ஏற்றுமதி அபிவிருத்தி தொடர்பில் மதிப்பீடு ஒன்று பெற்றுக்கொள்ளப்படுமாயின் | வர்த்தக கண்காட்சியின் நிறைவில் அதன் முன்னேற்றத்தை அளவீடு செய்வதற்கு அளவீடுகள் தயாரித்தல் மற்றும் ஏற்றுமதி அபிவிருத்தி தொடர்பில் மதிப்பீட்டுக்காக சபையினால் பின் தொடர் நடைமுறை ஒன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கிடைத்த கட்டளைகள் மற்றும் அவற்றின் பெறமதிகள் தொடர்பில் தரவுகள் பெற்றுக் கொள்ளப்பட்ட போதிலும் குறித்த ஏற்றுமதியாளர்களின் உண்மையான ஏற்றுமதி அபிவிருத்தி தொடர்பில் மதிப்பீடு ஒன்று இடம்பெறாமையால் ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கிய நிவாரணம் ஆக்கபூர்வமான விதத்தில் பயன்படுத்தப்பட்டதா என்பது தொடர்பில் போதுமான மதிப்பீடு இடம்பெற்றிருக்கவில்லை என்பதுடன் கணக்காயில் அது தொடர்பில் திருப்தி கொள்ள முடியாது இருந்தது. | ஏற்றுமதியாளர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகள் மற்றும் SLTB தரவு கட்டமைப்பில் உள்ள தரவுகளுடன் ஒப்பிடப்பட்டது. அதனால் 2022 ஆம் ஆண்டில் பங்கு பற்றிய வர்த்தக கண்காட்சிக்கான ஏற்றுமதி நிலைமையை மதிப்பீடு செய்தல் இந்த வருடத்தில் (2023) இடம்பெற்றவாறு உள்ளது | |
| (ஈ) | 1957 இன் 51 ஆம் இலக்க தேயிலை கட்டுப்பாட்டு அதிகாரச் சட்டத்தின் கீழ் தேயிலை தொழிற்சாலைகளை பதிவு செய்தல், தேயிலை தொழிற்சாலைகளை அபிவிருத்தி செய்தல் உள்ளடங்கலான கண்காணிப்பு பணிகள் சபையின் கட்டுப்பாட்டின் கீழ் இடம்பெற வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது 76 தொழிற்சாலைகளால் அங்கீகரிக்கப்பட்ட இயலவை விஞ்சி 11,630,711 கிலோகிராம் தேயிலை உற்பத்தி செய்யப்பட்டிருந்தது. | இந்த தொழிற்சாலைகளின் உற்பத்தி அங்கீகரிக்கப்பட்ட இயல் அளவை விஞ்சி மேற்கொள்ளப்பட்டிருந்த தொழிற்சாலைகள் தொடர்பில் தற்போது விசாரணைகள் இடம் பெற்றவாறு உள்ளதுடன் அவற்றின் தேயிலை கொழுந்து அளவு, மின்சார நுகர்வு ஆகியவை கருத்தில் கொள்ளப்பட்டு தேயிலை கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரகாரம் முறைகேடுகளில் ஈடுபட்ட தொழிற்சாலைகள் தொடர்பில் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு ஏனைய தொழிற்சாலைகளின் இயலளவினை அதிகரிப்பதற்கு குழு ஒன்று அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தேயிலை தொழிற்சாலைகள் தொடர்பில் கண்காணிப்பு மற்றும் ஒழுங்குறுத்துகை பணிகள் வலுப்படுத்தப்பட வேண்டும். |
| (உ) | சபையில் இறுதி தேயிலை இருப்பு பொதியிடுவதற்கு பயன்படுத்தப்படும் பைகளின் இருப்பின் பெறுவனவுகள், உற்பத்திக்காக பயன்படுத்துதல், பழுதடைந்த இருப்புக்களை அறிக்கையிடல் மற்றும் அகற்றுதல் உள்ளடங்களாக பொதியியிடல் இருப்பு அசைவு தொடர்பில் கணினி மயப்படுத்தப்பட்ட இருப்பு கட்டுப்பாட்டு நடைமுறையினுள் உள்ளடக்குதல் தொடர்பில் திட்டவட்டமான நடைமுறை ஒன்று கணக்காய்வு திகதி வரையிலும் நிறுவப்படவில்லை என்பது | இந்த தேவைப்பாடு சேகரிக்கும் கட்டத்தில் வழங்கப்படாத புதிய தேவை ஒன்றாகும். தற்போது அந்த தேவை தொடர்பில் நிறுவனம் அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் வசதிகளை உள்ளடக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | பொதியிடல் இருப்பு கட்டுப்பாடு கணினி மயப்படுத்தப்பட வேண்டும். |

அவதானிக்கப்பட்டது.

### 3.3 செயற்திட்ட அல்லது மூலதனத் தன்மையிலான பணி தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| தேயிலை கைத்தொழிலுக்கு தகவல் தொழில்நுட்ப கட்டமைப்பொன்றினை உருவாக்க 2016 ஆம் ஆண்டில் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன், தேயிலை விற்பனை மற்றும் மேம்படுத்தல் நிதியத்தினால் ரூபா 220,000,000 2018 ஜூலை 03 ஆந் திகதி சபைக்கு பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த போதிலும் இரு ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அந்த பணம் விளைவற்று நிறுத்தி வைக்கப்பட்டு 2020 செப்டம்பர் 30 ஆண்டுகரி தனியார் நிறுவனம் ஒன்றுடன் கட்டமைப்பினை நிறுவும் உடன்படிக்கை கைச்சாற்றிடப்பட்டிருந்தது.<br>அதற்கமைய ரூபா 53,964,995 தொகைக்கு ஒட்டுமொத்த கட்டமைப்பினை இரு வருடங்கள் ஆறு மாதங்களில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்ட போதிலும், 2023 ஏப்ரல் 30 ஆன் திகதி வரை பணி நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. மிகை மதிப்பீட்டின் அடிப்படையில் இந்தப் பணம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த காரணத்தால் ரூபா 166,035,005 ஆன தொகை தொடர்ந்தும் விளைவற்று காணப்பட்டதுடன் அந்த பெறுமதி ஏனைய செலுத்து வேண்டிய செலவினங்களின் கீழ் நிதிக்கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2020 ஜூன் 16 நிறைவடைந்த தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு தீர்மானத்தினை வழங்கிய பின்னர் 2020 ஜூலை 16 ஆன் திகதி Tea Value Chain Management System (TVCMS) நிறுவும் பணி தனியார் நிறுவனம் ஒன்றுக்கு கையளிப்பதற்கு செயல்திட்ட நடைமுறைப்படுத்தல் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.<br>COVID 19 காரணமாக போக்குவரத்து கட்டுப்பாடுகள் ஏற்பட்டமையால் செயல் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் காலத்தில் 1 வருடத்திற்கு மேற்பட்ட காலம் தாமதம் ஏற்பட்டது. முழுமையான செயற்திட்டம் 3 தனித்தனி கட்டங்களை கொண்டிருந்ததுடன், அவர்கள் தற்போது live environment இன் கட்டம் 1 இக்கு உரிய பகுதிகள் deploy இடப்பட்டுள்ளன. அதற்கு மேலதிகமாக அவர்கள் கட்டம் 2 இன்கீழ் தொழிற்சாலை ஒன்றில் நடைமுறையை பூர்த்தி செய்துள்ளனர்.<br>அந்த தனியார் நிறுவனத்திற்கு மொத்த பணத்தில் 30% மாத்திரம் செலுத்தப்பட்டுள்ளது. | தகவல் தொழில்நுட்ப கட்டமைப்பினை நிறுவும் நடவடிக்கைகளை துரிதமாக நிறைவு செய்தல் மற்றும் எஞ்சிய பணத்தை அந்த நிதியத்திற்கு மாற்றி தேயிலை சந்தைப்படுத்தல் மற்றும் மேம்படுத்தல் பணிகளை செயல் திறனாக முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.4 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| பெறுகைகள் வழிகாட்டி கோவையில் 4.3.1 ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை தேயிலை சபையில் புதிய கட்டிடத்தில் மத்தியபடுத்தப்பட்ட வளிச்சீராக்கல் கட்டமைப்பின் விநியோகம், பொருத்துகை, நடைமுறைப்படுத்தல் மற்றும் பராமரித்தல் ரூபா 32,182,460 ஆன ஒப்பந்தம் தொடர்பில் விரிவான மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அவ்வாறான குறைபாடுகள் மீண்டும் ஏற்படாதவாறு நடவடிக்கை எடுப்பதற்கு எழுத்து மூலம் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | பெறுகைகள் வழிகாட்டி கோவையின் பிரகாரம் ஒப்பந்தத்திற்கான மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும் . |

### 3.5 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் அங்கீகரித்த பதவியணியினர் 335 ஆக இருந்ததுடன் உள்ளபடியான பதவியணியினர் 246 ஆகும். அதற்கிணங்க உயர் முகாமைத்துவ மட்டத்திற்குரிய பிரதிப் பணிப்பாளர் (சந்தைப்படுத்தல்), பணிப்பாளர் (அபிவிருத்தி) மற்றும் பணிப்பாளர் (நிருவாகம்) ஆகிய 03 பதவிகள் (03 ஆண்டுகளுக்கும் 06 மாதங்களுக்கும் இடையே) உள்ளடங்கலாக வெற்றிடமான 89 பதவிகள் காணப்பட்டதுடன் அவற்றினை நிரப்புவதற்கு அல்லது அங்கீகரித்த ஊழியர் எண்ணிக்கையினை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டு முதல் அரசினால் வெற்றிடங்களை நிரப்புதல் தற்காலிகமாக இடைநிறுத்த பட்டமையால் இலங்கை தேயிலை சபையில் வெற்றிடமாக நிலவும் பதவிகளுக்கு ஆட்சேர்க்க முடியாதுள்ளது. சேவையின் தேவைபாட்டின் அடிப்படையில் அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு தொடர்ச்சியாக அமைச்சின் ஊடாக பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்ட போதிலும் இதுவரையிலும் அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு அங்கீகாரம் வழங்கப்படவில்லை. எவ்வாறான போதிலும் வருடாந்த இலக்கினை பூர்த்தி செய்து செயற்திறனாக தேயிலை தொழிற்சாலையின் தரப்பினருக்கு சேவைகளை வழங்குவதற்கு தேயிலை சபைக்கு அங்கீகரிக்கப்பட்ட பதவியணி அத்தியாவசியமான தேவை என்பதால் அந்த பதவியணியை திருத்தியமைத்து குறைப்பதற்கு முடியாது உள்ளது. | அத்தியாவசியமான பதவிகளுக்கு உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| இலங்கை தேயிலை சபையின் புதிய கட்டிடத்தின் மத்திய படுத்தப்பட்ட வளிசீராக்கல் கட்டமைப்பினை விநியோகம், பொருத்தல் நடைமுறைப்படுத்துதல் மற்றும் பராமரிக்கும் ஒப்பந்தத்திற்கு 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 13,462,663 மற்றும் ரூபா 10,684,706 கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அந்தப் பணிக்காக குறித்த ஆண்டுகளின் வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டீராமையால் முறையான பாதீட்டு கட்டுப்பாடு இடம்பெறுவது இல்லை என்பது கணக்காயில் அவதானிக்கப்பட்டது | ஐயவினாவில் குறிப்பிடப்பட்டுள்ள மத்தியப்படுத்தப்பட்ட வளிச்சீராக்கல் கட்டமைப்பினை பொருத்தி நடைமுறைப்படுத்துதல் மற்றும் பராமரிப்பதற்கு 2019 ஆம் ஆண்டின் நிதி கூற்றுகளில் நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளுமாறு பெறுகைகள் பிரிவில் கோரிக்கை விடுக்கப்படாமல் மற்றும் 2019ஆம் ஆண்டில் பணிகள் ஆரம்பிக்க நேர்ந்தமையால் 2019 ஆம் ஆண்டின் நிதி கூற்றுகளில் வெளிப்படுத்தல் மாத்திரம் இடம்பெற்றிருந்தது. | வரவு செலவு திட்ட கட்டுப்பாடு வலுப்படுத்தப்பட வேண்டும். |